**ஜூலை – 17**

# TNPSC துளிகள்

- பாலின மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.1.5 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும் என்று பீகார் மாநில அரசு அறிவித்துள்ளது.
    - பீகார் அரசு கூடுதலாக கின்னார் கல்யான் வாரியத்தையும் (மூன்றாம் பாலினத்தவர் நல வாரியம்) அமைக்கவிருக்கின்றது.
- பாகிஸ்தான் அரசு இந்திய விமானங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி விமானப் போக்குவரத்திற்காகத் தனது வான்வழிப் பாதையைத் திறந்துள்ளது. 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற பால்காட் விமானப் படைத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தான் தனது வான்வழிப் பாதையைப் பயன்படுத்த இந்திய விமானங்களுக்குத் தடை விதித்திருந்தது.
- ஒவ்வொரு ஆண்டும் பிரான்சு நாடு ஜூலை 14 ஆம் தேதியை தேசிய பிரான்சு தினமாக அனுசரிக்கின்றது. மேலும் இது பாஸ்டைல் தினம் என்றும் அழைக்கப்படுகின்றது.
    - இத்தினம் பாஸ்டைல் சிறைத் தகர்ப்பின் நினைவை அனுசரிக்கின்றது. மேலும் இத்தினம் 1789 ஆம் ஆண்டு ஜூலை 14 அன்று பிரெஞ்சுப் புரட்சி தொடங்கியதையும் அனுசரிக்கின்றது.
- “விஜய் நடவடிக்கை” வெற்றி பெற்றதின் 20வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களைத் தொடங்குவதற்காக 2019 ஆம் ஆண்டு ஜூலை 14 அன்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் புது தில்லியில் உள்ள தேசியப் போர் நினைவிடத்தில் வெற்றிச் சுடரை ஏற்றினார்.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் 20 முதல் 28 ஆம் தேதி வரை கோவாவின் பனாஜியில் இந்திய சர்வதேசத் திரைப்படத் திருவிழாவின் (IFFI - International Film Festival of India) பொன் விழாப் பதிப்பு நடைபெறவிருக்கின்றது. 2004 ஆம் ஆண்டிலிருந்து இந்நிகழ்ச்சியானது நிரந்தரமாக கோவாவில் நடைபெறுகின்றது.
    - இந்த ஆண்டு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்காளர் நாடு இரஷ்யா ஆகும்.
- ரோமானியாவைச் சேர்ந்த சைமோனா ஹலீப் என்பவர் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் என்வரை இறுதிச் சுற்றில் 6-2, 6-2 என்ற கணக்கில் வீழ்த்தி 2019 ஆம் ஆண்டின் மகளிர் ஒற்றையர் விம்பிள்டன் பட்டத்தை வென்றுள்ளார்.
    - தற்பொழுது விம்பிள்டனில் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதலாவது ரோமானியராக சைமோனா ஹலீப் விளங்குகின்றார். மேலும் இவர் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரெஞ்சு ஓபனிலும் வெற்றி பெற்றுள்ளார்.
- இந்தியத் தொலைத் தொடர்புத் துறை மற்றும் சர்வதேசப் பொருளாதார உறவுகள் மீதான ஆராய்ச்சிக்கான இந்திய மன்றம் (Indian Council for Research on International Economic Relations) ஆகியவை தொலைத் தொடர்புத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கு வேண்டி இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கான அகலப் பட்டை தயார்நிலைக் குறியீட்டை மேம்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- சிங்கப்பூர் குடியரசின் அதிபரான ஹலிமாஹ் யக்கோப் என்பவர் இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான A.K.சிக்ரியை சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்றத்தின் (SIIC - Singapore International Commercial Court) சர்வதேச நீதிபதியாக நியமித்துள்ளார். இவர் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி இப்பொறுப்பை

ஏற்கவிருக்கின்றார்.

- இவருடைய பதவிக் காலம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 4 அன்று முடிவடையும். தற்பொழுது SICC ஆனது 16 சர்வதேச நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## அயல்நாட்டு மாணவர்களுக்காக இந்தியாவில் பயில்வோம் திட்டம்

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது, "இந்தியாவில் பயில்வோம் திட்டத்தில்" யோகாப் பயிற்சியும் சேர்க்கப்பட்டுள்ளது என்று மக்களவையில் தெரிவித்துள்ளது.
- இது இந்தியாவில் நம்பத் தகுந்த யோகாப் பயிற்சியைப் பெறுவதற்கு வெளிநாட்டு மாணவர்களையும் வெளிநாட்டிலிருந்து யோகாப் பயிற்சி பெற விரும்புபவர்களையும் அனுமதிக்கின்றது.
- மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (Central Board of Secondary Education - CBSE), தன் கீழ் உள்ள பள்ளிகளில் சுகாதார மற்றும் உடற்பயிற்சிக் கல்வியின் ஒரு பகுதியாக யோகாப் பயிற்சியை ஏற்கெனவே சேர்த்துள்ளது.

## பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம்

- 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் 2019 ஆம் ஆண்டு மார்ச் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் பிரதம மந்திரி ரோஜ்கர் புரோட்சகன் யோஜனா (PMRPY - Pradhan Mantri Rojgar Protsahan Yojana) என்ற திட்டத்தின் கீழ் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலையில் இணைந்துள்ளனர்.

**Beneficiaries under PMRPY**

*(August 1, 2016 to March 3, 2019)*

| State | Number of employees |
|---|---|
| Maharashtra | 21,06,405 |
| Tamil Nadu | 14,17,808 |
| Karnataka | 11,51,215 |
| Gujarat | 10,28,838 |
| Haryana | 9,70,736 |
| **India** | **1,18,05,003** |

**Industry-wise PMRPY statistics**

| Industry | Employee benefited |
|---|---|
| Expert services | 47,06,945 |
| Trading – Commercial | 8,09,949 |
| Textiles | 7,79,321 |
| Building and construction | 7,57,435 |
| Garment making | 6,18,104 |

Source: Ministry of Labour and Employment data presented in the Lok Sabha on July 15, 2019

- மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களிலிருந்து 57 சதவிகிதம் நபர்கள் தொழிலாளர் சக்தியில் இணைந்துள்ளனர்.
- PMRPY திட்டத்தின் கீழ், 3 ஆண்டுகளுக்கு அனைத்துத் துறைகளிலும் உள்ள அனைத்து தகுதி வாய்ந்த புதிய தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றிற்கான பணியளிப்பவரின் ஒட்டுமொத்தப் பங்களிப்பினையும் (12 சதவிகிதம் அல்லது தகுந்தாற்போல்) அரசே

செலுத்துகின்றது.

- PMRPY ஆனது வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக பணியளிப்பவர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## GSLV மாக் 3 சந்திரயான் 2 விண்கலன்

- ஜிஎஸ்எல்வி மாக் 3 ஏவு வாகனத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சந்திரயான் – 2 செலுத்துதலானது தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.
- இஸ்ரோவின் மிகவும் சக்தி வாய்ந்த மற்றும் சமீபத்திய விண்கலன் ஜிஎஸ்எல்வி மாக் – 3 ஆகும்.
- இதுவரை இரண்டு முறை செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணுக்கு இது கொண்டுச் சென்றுள்ளது.
- இது பின்வருவனவற்றால் இயக்கப்படுகின்றது.
    - முக்கிய திரவ என்ஜின்
    - இரண்டு திட உந்துகலன்கள்
    - கிரையோஜெனிக் என்ஜின்
- கிரையோஜெனிக்ஸ் என்பது குறைந்த வெப்பநிலையில் பொருட்களின் செயல்படும் விதம் குறித்த அறிவியலாகும்.
- ஜிஎஸ்எல்வி விண்கலன்கள் அதிக எடையுள்ள செயற்கைக் கோள்களைத் தாங்கி, விண்வெளியின் தொலைதூர பகுதிக்குப் பயணிக்கும் திறன் கொண்டது.




## கருக்கலைப்பு குறித்த நீதிப் பேராணை

- பெண்களின் மகப்பேறு வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் உரிமையை அனுமதிக்கும் மற்றும் கருக்கலைப்பை குற்றமற்றதாக அறிவிக்கக் கோரும் நீதிப் பேராணையை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.
- 1971 ஆம் ஆண்டின் மருத்துவக் கருக் கலைப்புச் சட்டத்தின் படி (Medical Termination of Pregnancy), இந்தியாவில் கருத்தரித்து 20 வாரங்களுக்குப் பின்பு கருவைக் கலைக்க

அனுமதிக்கப் படுவதில்லை.

- MTP சட்டமானது திருமணமானப் பெண்களை அவர்களின் "திட்டமிடப்படாத மற்றும் தேவையற்ற கர்ப்பத்தை" கலைக்க அனுமதிப்பதன் மூலம் அவர்களைப் பாதுகாக்கின்றது. ஆனால் இது திருமணமாகாத பெண்களுக்கு நீட்டிக்கப்படவில்லை.

## சர்வதேசத் தடுப்பூசித் திட்டம் - தோல்வி

- உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெப் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 2018 ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் 19.4 மில்லியன் குழந்தைகள் உயிர்க் காக்கும் தடுப்பூசிகளைப் பெறத் தவறியுள்ளனர்.
- 19.4 மில்லியன் குழந்தைகளில் 11.7 மில்லியன் குழந்தைகள் 10 நாடுகளில் குறைந்த அளவிலும் தடுப்பூசியேப் பெறாமலும் உள்ளனர். அந்த நாடுகளாவன: நைஜீரியா (3 மில்லியன்), இந்தியா (2.4 மில்லியன்), பாகிஸ்தான் (1.4 மில்லியன்).
- கடந்த ஆண்டில் சர்வதேச அளவில் 3,50,000 நபர்களுக்குத் தட்டம்மை நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது 2017 ஆம் ஆண்டை விட இருமடங்காகும்.
- 2018 ஆம் ஆண்டில் மிக அதிக அளவில் தட்டம்மை பாதிப்புகளைக் கொண்ட நாடு உக்ரைன் ஆகும்.

## தேசியப் புலனாய்வு அமைப்பு (திருத்த) மசோதா

- மக்களவையானது 2019 ஆம் ஆண்டின் தேசியப் புலனாய்வு அமைப்பு (NIA - National Investigation Agency) திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- பின்வரும் குற்ற வழக்குகள் NIA வினால் விசாரணை செய்ய முடியும்.
    - ஆள் கடத்தல்
    - போலி நாணயங்கள் மற்றும் வங்கிப் பணம் தொடர்பான குற்றங்கள்
    - தடை செய்யப்பட்ட ஆயுதங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை
    - இணைய வழிக் குற்றம்
    - வெடி பொருள் சட்டம், 1908 -ன் கீழுள்ள குற்றங்கள்
- இந்தியா முழுவதும், இதுபோன்ற குற்றங்களை விசாரிப்பது தொடர்பாக மற்ற காவல் துறை அதிகாரிகளைப் போல NIA அதிகாரிகளும் அதிகாரங்களைக் கொண்டு இருப்பர்.
- இந்த வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக அதற்கான சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். நீதிபதிகளின் நியமனங்கள் இடமாறுதல்/தாமதம் ஆகியவற்றின் மூலம் இந்த வழக்குகள் தாமதமாகாது.
- வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் சொத்துகள் மற்றும் இந்தியத் தூதரகங்களுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகள் குறித்தும் இந்த அமைப்பு விசாரிக்கும்.

### *NIA பற்றி*

- NIA ஆனது மத்திய தீவிரவாதத் தடுப்புச் சட்ட அமலாக்க அமைப்பாக செயல்படுவதற்கு 2008 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

- மாநிலங்களில் இருந்து சிறப்பு அனுமதி இல்லாமல் மாநிலங்களில் தீவிரவாதம் தொடர்பான குற்றங்களை விசாரிக்க இந்த அமைப்புக்கு அதிகாரம் உள்ளது.


### தேசிய டிஜிட்டல் சுகாதார செயல்திட்டம்

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்த்தன் தேசிய டிஜிட்டல் சுகாதார செயல்திட்ட அறிக்கையைப் பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துகளைப் பெறுவதற்காகப் பொது வெளியில் வெளியிட்டுள்ளார்.
- இது தேசிய அளவில் ஒன்றிணைக்கப்பட்ட சுகாதார அமைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆயுஷ்மான் பாரத் யோஜனா, மகப்பேறு குழந்தைகள் நலம், நிக்சாய் போன்ற திட்டங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகள் சுகாதார சேவைகளை வலுவான மற்றும் திறமையான முறையில் வழங்க சேகரிக்கப்பட்டு கண்காணிக்கப் படவிருக்கின்றன.

## சர்வதேசச் செய்திகள்

### கடந்த 30 ஆண்டுகளில் சீனாவின் மோசமான வளர்ச்சிக் குறைவு

- இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 6.2 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.



- உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடான சீனாவின் கடந்த 27 ஆண்டுகளில் மிகவும் மோசமான பொருளாதார வளர்ச்சி இதுவாகும்.
- இது அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் மற்றும் மோசமான உலகளாவிய தேவை ஆகியவற்றின் விளைவாக நிகழ்ந்துள்ளது.

## மாநிலச் செய்திகள்

### அகல்யாபாய் ஹோல்கர் சர்வதேச விமான நிலையம்

- மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் உள்ள தேவி அகல்யாபாய் ஹோல்கர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து முதலாவது சர்வதேச விமானம் 153 பயணிகளுடன்

துபாய்க்கு புறப்பட்டுச் சென்றது.

- இது கடவுச் சீட்டு (இந்தியாவிற்குள் நுழைதல்) விதிகள், 1950-ன் விதி 3ன் துணை விதி (b)ன் கீழ் 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்டது.
- இந்த விமான நிலையம் மராத்தியப் பேரரசின் ஹோல்கர் வம்சத்தைச் சேர்ந்த இந்தூரின் மகாராணி அகல்யா பாய் ஹோல்கரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### ஆலன் தூரிங்

- இரண்டாம் உலகப் போரின் போது குறிமுறை நீக்க வல்லுநராக இருந்த ஆலன் தூரிங் என்பவரின் உருவத்தை பிரிட்டனின் புதிய 50 பவுண்ட் பணத்தில் பொறிப்பதற்காக இங்கிலாந்து வங்கியினால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- பழமையான பிரிட்டீஷ் சட்டத்தின் கீழ் அவருடைய ஓரினச் சேர்க்கைக் குற்றத்திற்காக அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டு அதன் மூலம் ஏற்பட்ட அவருடைய துயரமான இறப்பிற்குப் பின்பு பத்தாண்டுகள் கழித்து இந்த முக்கியமான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டில் இவர் இறந்த பின்பு இரண்டாம் எலிசபெத் அரசியிடமிருந்து கருணை மன்னிப்பினைப் பெற்றார்.
- இவருடைய தூரிங் இயந்திரங்கள் ஜெர்மனின் நாஜிப் படைகளின் மீது அழுத்தம் செலுத்துவதற்கு நேச நாடுகளுக்கு உதவியது.
- அறிவியல் துறையில் இவருடைய தலைசிறந்தப் பங்களிப்புகளுக்காக கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் தந்தை என்று இவர் அறியப்படுகின்றார்.

- - - - - - - - - - - - - -